## கடந்த பட்ஜெட்டில், தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் கிடையாது. 'தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை!

# தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற பா.ஜ.க - அடிமை அ.தி.மு.க.வை தமிழ்நாட்டு மக்கள் புறக்கணிக்க வேண்டும்!

### ஆலங்குடியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**ஆலங்குடி, 6–**

**புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து, பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``தமிழ்நாட்டுக்கு என்று ஏதாவது திட்டங்கள் கொடுக்கிறார்களா? கிடையாது. கடந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று எந்தத் திட்டமும் கிடையாது. 'தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற பா.ஜ.க–வையும் அவர்களுக்குத் துணை போகும் அடிமை அ.தி.மு.கவையும் தமிழ்நாடு புறக்கணிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

கடந்த 2021–ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலின் போது, இதே தெருவில், இதே இடத்தில் வந்து அண்ணன் மெய்யநாதன் அவர்களுக்கு நான் வாக்கு கேட்டேன். அப்போது, ``அண்ணன் மெய்யநாதன் அவர்களை நீங்கள் 25,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும்" என்று நான் சொன்னேன். நீங்கள் வாக்குறுதி கொடுத்தீர்கள், கொடுத்த வாக்குறுதியைச் செய்து காட்டிவிட்டீர்கள்.

#### உதயசூரியன் சின்னம்

இப்போது மீண்டும் 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. நம் தலைவர் அவர்கள் பல ஊர்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்; எல்லா மாவட்டத்துக்கும் சென்று மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானும் கடந்த ஒரு வாரமாகத் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒரு 5 தொகுதி, 6 தொகுதி என்று மக்களைச் சந்தித்து, நம் கூட்டணிக் கட்சி சகோதரர்களைச் சந்தித்து, மகளிரைச் சந்தித்து, உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று என் பிரச்சாரத்தைச் செய்து கொண்டு வருகிறேன்.

அப்படித்தான் இன்று இங்கே வந்தேன். உங்களையெல்லாம் பார்த்து, ``எல்லாரும் தயவு செய்து உதயசூரியன் சின்னத்தில் அண்ணன் மெய்யநாதன் அவர்களுக்கு வாக்களித்துவிடுங்கள்" என்று கேட்க வந்தேன். ஆனால், ``நீங்களெல்லாம் இதை ஏற்கனவே ஒரு முடிவு பண்ணி வைத்திருக்கிறீர்கள் என்பது இங்கே வந்த பிறகுதான் தெரிகிறது.

#### மிகவும் கூர்மையானவர்கள்

உதயசூரியன் சின்னத்தில் கடந்த முறை 25,000 வாக்குகள், இந்த முறை 50,000 வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் மெய்யநாதன் அவர்களை நீங்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும். ஆலங்குடி தொகுதி மக்கள் மிகவும் கூர்மையானவர்கள், சொன்னால் செய்து காட்டிவிடுவீர்கள்.

அண்ணன் மெய்யநாதன் பற்றி நான் உங்களிடம் அதிகம் சொல்ல விரும்பவில்லை. உங்களுக்கு அவரை நான் அறிமுகம் செய்ய வேண்டிய அவசியமே கிடையாது. உங்கள் அத்தனை பேருக்கும் பரிச்சயமானவர். உங்களில் ஒருவர் அண்ணன் மெய்யநாதன் அவர்கள். இந்தத் தொகுதியின் வெற்றி வேட்பாளர், நிச்சயம் வெற்றி உறுதி. இந்த முறையும் சொல்கிறேன், இந்த முறை நீங்கள் அவரை சட்டமன்ற உறுப்பினர் என்று தேர்ந்தெடுக்கப் போவதில்லை, ஓர் அமைச்சரைத் தேர்ந்தெடுத்து அனுப்பப் போகிறீர்கள்.

மூன்றாவது முறையாக இந்தத் தொகுதியில் போட்டியிடுகிறார். இரண்டு முறை போட்டி போட்டு இரண்டு முறையும் வெற்றி பெற்றிருக்கிறார். இந்த முறை ஹாட்ரிக் அடிக்க வேண்டும். ஓர் அமைச்சராக இந்தத் தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களைத் தந்தவர் அண்ணன் மெய்யநாதன் அவர்கள். அவரைப் பார்க்கும் போது மிகவும் மென்மையானவராக இருப்பார், சிரித்த முகத்தோடு இருப்பார், யாரிடமும் கோபமாகப் பேசமாட்டார், அதட்டிப் பேசமாட்டார், திட்டமாட்டார். ஆனால், வேலை என்று வந்துவிட்டால் மிகவும் கூர்மையானவர். அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இந்த ஆலங்குடியின் வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றவர்தான் அண்ணன் மெய்யநாதன் அவர்கள்.

#### மிகப்பெரிய சாதனைகள்

எனக்கு என்ன தனிப்பட்ட முறையில் பெருமை என்றால், எனக்கு இப்போது ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்தான் துணை முதலமைச்சர் பொறுப்புக் கொடுத்தார்கள். அதற்கு முன்பு ஒரு ஆண்டுக்கு முன்னால் விளையாட்டுத் துறையின் அமைச்சர் என்று தலைவர் எனக்கு பொறுப்பைக் கொடுத்தார். அந்த விளையாட்டுத் துறையில் மிகப்பெரிய சாதனைகளைச் செய்து காட்டியிருக்கிறோம். அந்த விளையாட்டுத் துறையில் எனக்கு முன்னால் என் சீனியர் அமைச்சராக இருந்தவர் அண்ணன் மெய்யநாதன் அவர்கள். அதனால் சொல்கிறேன், என் சீனியர் அமைச்சருக்கு, ஜூனியர் நான் வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

நானும் ஒரு வேட்பாளர். நானும் தேர்தலில் போட்டியிடுகிறேன். சென்னையில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் நான் போட்டியிடுகிறேன். இரண்டாவது முறையாக நிற்கிறேன். என் தொகுதிக்கு இதுவரை ஒரே ஒரு நாள்தான் சென்று வாக்கு கேட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா, என் தொகுதிக்குச் செல்லாமல் இங்கே வந்திருக்கிறேன்? என் வெற்றியை விட அண்ணன் மெய்யநாதனின் வெற்றி மிக மிக முக்கியமான வெற்றி. அந்த வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் பணி, கழகப் பணி, அரசுப் பணி எதுவாக இருந்தாலும் தன்னை நிரூபித்துக் காட்டியிருக்கக்கூடியவர் அண்ணன் மெய்யநாதன் அவர்கள். அந்த உரிமையுடன் உங்களையெல்லாம் சந்தித்து வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.



இந்தத் தொகுதியில் இந்த ஐந்து ஆண்டுகளில் பல திட்டங்களை அண்ணன் மெய்யநாதன் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

#### 5 ஆண்டுகளில் பல திட்டங்கள்

13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு கலைக் கல்லூரி இங்கே கொண்டு வந்தது அண்ணன் மெய்யநாதன் அவர்கள்.

3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவரங்கம் பகுதியில் சிறு விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) கொண்டு வந்தார்.

அண்ணன் மெய்யநாதன் அவர்களின் முயற்சியில், கீரமங்கலம் பேரூராட்சியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலைப் பணிகள் நடைபெற்றன.

அழியாநிலையில் 40,000 மெட்ரிக் டன் நெல் சேமிப்புக் கிடங்கு கொண்டு வந்தார்.

அண்ணன் மெய்யநாதனுடைய முயற்சியில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெண்ணவால்குடியிலிருந்து குழாயன்காடு வரை புதிய தார்ச்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

கீரமங்கலத்தில் துணை வேளாண் விரிவாக்க மையம், புதுக்கோட்டை விடுதியில் கால்நடை மருந்தகக் கட்டடம் இன்று இந்தத் தொகுதி முழுக்க இருக்கக்கூடிய பல்வேறு ஊர்களில் புதிய பள்ளிக் கட்டடங்கள், அங்கன்வாடிகள், துணை சுகாதார நிலையக் கட்டடங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இப்படிப் பல்வேறு பணிகள், ஆலங்குடி பேரூராட்சியில் கலைஞர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இவை அத்தனையும் ஒரு சிறிய உதாரணம்தான். இந்தத் தொகுதிக்கு அண்ணன் மெய்யநாதன் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக என்னென்ன கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சிறிய உதாரணம்தான் இப்போது நான் சொன்னேன்.

வெற்றிபெறச் செய்யவேண்டும்

இந்தப் பணிகள் எல்லாம் இன்னும் தொடர வேண்டும், இன்னும் பல்வேறு திட்டங்கள் உங்கள் தொகுதிக்கு வர வேண்டும் என்றால், வரும் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்து விட வேண்டும். வெற்றிபெறச் செய்து அனுப்பினீர்கள் என்றால், அடுத்த நிமிடம் அவர் அமைச்சராகிவிடுவார். அப்போது உங்கள் தொகுதிக்கு இன்னும் அதிகமான திட்டங்களைக் கொண்டு வருவார்.

வரும்போது என்னிடம் சொன்னார், 'மீண்டும் நம் தலைவர்தான் ஆட்சியமைக்கப் போகிறார், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப் போகிறது. மீண்டும் நம் தலைவர் ஆட்சிக்கு வரும்போது என் தொகுதிக்குச் சில கோரிக்கைகள் வைத்திருக்கிறேன். இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நீங்கள் மீண்டும் நம் ஆட்சி வரும் போது நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்.

#### புதிய கோரிக்கைகள்

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கொத்தமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டும்.

கீரமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலூகா உருவாக்க வேண்டும்.

அரசர்குளம் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்.

கீரமங்கலம் பகுதியில் கழிவுநீர் கால்வாய் அமைக்க வேண்டும்.

கொத்தக்கோட்டை, எல்.என்.புரம், கல்லாங்குடி, மாங்காடு உள்ளிட்ட ஊர்களில் தார்ச்சாலை போட வேண்டும்.

ஆவணத்தான்கோட்டையில் ஐ.டி.ஐ கொண்டு வர வேண்டும்.

ஆலங்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

புதுக்கோட்டை - ஆலங்குடி - ஆவணம் சாலையை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட வேண்டும்.

வல்லத்திராக்கோட்டையில் அரசு முன்மாதிரி மேல்நிலைப் பள்ளி வேண்டும்.

வெண்ணவால்குடி ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டும்.

பணங்குளம் மற்றும் செங்கமாறி ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை வேண்டும்.

இவ்வளவு திட்டங்களும் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். இன்னொரு முக்கியமான கோரிக்கை, இந்த மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கை: பெரும்பிடுகு முத்தரையர், மாமன்னர் மருதுபாண்டியர், வீரன் அழகுமுத்துக்கோன், வ.உ.சிதம்பரனார் ஆகியோருக்கு அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் இங்கே ஒரு மணிமண்டபம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

நீங்கள் வெற்றி பெறச் செய்து அனுப்பினீர்கள் என்றால் நிச்சயம் முதலமைச்சரிடம் கொண்டு சென்று, இந்த அத்தனை கோரிக்கைகளையும் நான் உங்களுக்குச் செய்து கொடுப்பேன்.

நான் கடந்த ஒரு வாரமாக பிரச்சரத்தில் இருக்கிறேன். மக்களைச் சந்திக்கிறேன். நம் முதலமைச்சர் அவர்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் உதயசூரியனுக்கு வாக்களியுங்கள். நம் முதலமைச்சர் மீண்டும் முதலமைச்சராக அமர வேண்டும் என்பதை எந்த ஒரு அடிப்படையில் சென்று கேட்கிறோம்? கடந்த ஐந்து வருடமாகச் செய்திருக்கக்கூடிய திட்டங்கள் மக்களைச் சென்று சேர்ந்திருக்கின்றன என்கிற அந்த நம்பிக்கையில் சென்று கேட்கிறோம்.

#### பல்வேறு திட்டங்கள்

இவ்வளவு நேரம் உங்களின் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உங்கள் அமைச்சர் என்னென்ன கொடுத்திருக்கிறார் என்று சொன்னேன். இன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து மக்களுக்கும் பரவலாகச் செல்வது மாதிரி பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம்.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது நம் தலைவர் சொன்ன வாக்குறுதி, தேர்தல் அறிக்கையில் சொன்னோம், ``ஆட்சி அமைந்த உடனே மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம் செயல்படுத்தப்படும்" என்று சொன்னோம். நம் கழக ஆட்சி அமைந்த உடனே முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாக இன்று ஒவ்வொரு மாதமும் மகளிர் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும், பசியில்லாமல் கல்வி கற்க வேண்டும் என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்துக் குழந்தைகளுக்கும் காலை உணவு வழங்குகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று சேர்ந்தாலும் அவர்களுக்கு மாதந்தோறும் கல்வி ஊக்கத்தொகையாக ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் கொடுத்திருக்கிறார். 13 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

#### அ.தி.மு.க பொய்ப் பிரச்சாரம்

இரண்டு மாதத்துக்கு முன்னால் கல்லூரி மாணவ, மாணவிகள் பத்து லட்சம் பேருக்கு இலவச மடிக்கணினி திட்டத்தைச் சொல்லி ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறோம். இன்று அ.தி.மு.க ஒரு பொய்ப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறார்கள். இந்த மடிக்கணினி திட்டம் அவர்கள் கொண்டு வந்த திட்டம், அதை நாம் முடக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள், தேர்தலுக்காகக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். உண்மைதான், அ.தி.மு.க–தான் இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பள்ளிக்கூடம் படிக்கிற குழந்தைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 2019–ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தை அ.தி.மு.க அரசு கைவிட்டுவிட்டது. ஆனால் நம் முதலமைச்சர் பார்த்தார், இந்த மடிக்கணினி கல்லூரி படிக்கிற மாணவர்களுக்கு இன்னும் பயனுள்ளதாக இருக்கும்; மேற்படிப்பு படிக்க, ஒரு இடத்தில் வேலையில் சேர, திட்டப்பணிகளை தயார் செய்ய என்று கல்லூரி மாணவர்களுக்கு கொடுத்தால் அதிகமாகப் பயனுள்ளதாக இருக்கும் என்று 10 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இன்று மடிக்கணினியை நம் அரசு கொடுத்திருக்கிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கடந்த மூன்று வருடமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் வங்கி கணக்கில் செலுத்தி வருகிறார். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணி முயற்சி செய்தது. தேர்தலைக் காரணங்காட்டி நிறுத்திவிடலாம், மூன்று மாதத்துக்கு நிறுத்துவோம் என்று முயற்சி எடுத்தார்கள்.

நம் தலைவர் என்ன செய்தார், அந்தச் சூழ்ச்சியையெல்லாம் முறியடிக்கிற மாதிரி பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் என மூன்று மாதத்துக்கும் சேர்த்து 3,000 ரூபாயுடன், கோடை கால சிறப்பு நிதி 2,000 என மொத்தம் 5,000 ரூபாயை ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஒரே தவணையில் நம் தலைவர் கொடுத்தார். தலைவர் காலை 6.30 மணிக்கே கணக்கில் அனுப்பிவிட்டார். மகளிர் எல்லாருக்கும் ஆச்சரியம், அனைவரும் அதிர்ச்சி, யார் கொடுத்தார்கள் என்றே தெரியவில்லை. அதற்குப் பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது முதலமைச்சர் கொடுத்திருக்கிறார் என்று. ஆறரை மணிக்குக் கொடுத்தார், ஒன்பது மணிக்கெல்லாம் மகளிர் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டார்கள். ஏன்? அந்தப் பணத்தை மோடி எடுத்துவிடுவார், குறைந்தபட்ச இருப்பு என்று சொல்லி மோடி அந்தப் பணத்தைப் பறித்துவிடுவார் என்று அவ்வளவு நம்பிக்கை.

இன்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார், மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடன் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து உயர்த்தி 2,000 ரூபாய் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

காலைஉணவுத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு எட்டாம் வகுப்பு வரை காலை உணவுத் திட்டம் வழங்கப்படும். முதியோர் உதவித்தொகை 1,200–லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறோம்.

கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,500–ஆக உயர்த்தப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்துக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் 35 லட்சம் இலவச மடிக்கணினிகள் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

#### 10 லட்சம் வீடுகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எந்தவிதப் பிணையும் இல்லாமல் 5 லட்சம் ரூபாய் வரை கடன் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் கலைஞர் கனவு இல்லத் திட்டம் மூலம் 10 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு, வீடு இல்லாத அனைவருக்கும் வீடு கொடுக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

ஆட்சி அமைந்த உடனே நம் முதலமைச்சர் அவர்கள் எல்லா மகளிர் கையிலும் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்தக் கூப்பனை வைத்துக்கொண்டு, உங்கள் வீட்டிற்கு என்ன பொருள் வாங்க வேண்டும், என்ன மின்சாதனப் பொருட்கள் வாங்க வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளலாம். பிரிட்ஜ், டிவி, குக்கர், மைக்ரோவேவ் ஓவன் எதுவாக இருந்தாலும் இனிமேல் மகளிரே முடிவெடுக்கட்டும் என்று முதலமைச்சர் அந்தக் கூப்பன் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

இதெல்லாம் நடக்க வேண்டும் என்றால், நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயம் அமைய வேண்டும் என்றால், நாம் அடுத்த 18 நாட்கள் மக்களைச் சந்தித்து வாக்கு கேளுங்கள். நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், ``உதயநிதி வந்தார், பேசினார், திட்டங்களைப் பற்றிச் சொன்னார், வாக்குறுதிகள் சொன்னார், போய்விட்டார்" என்று கலைந்து சென்றுவிடக் கூடாது. அடுத்த 18 நாள் இந்தப் பிரச்சாரத்தை உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மக்களிடம் கொண்டு சென்று நீங்கள் சேர்க்க வேண்டும். ஒவ்வொரு தெருவாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வீடாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வாக்காளராகச் சந்தியுங்கள். ஏன் மீண்டும் தி.மு.க–வுக்கு வாக்களிக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்துவிடுங்கள்.

என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறோம் என்பதையும் சொல்லுங்கள். தி.மு.க இல்லாமல் மீண்டும் அடிமைக் கூட்டம் இங்கே ஆட்சி அமைத்தால் தமிழ்நாட்டை எவ்வளவு பின்னோக்கி கொண்டு சென்றுவிடுவார்கள் என்கிற அந்த விஷயத்தையும் நீங்கள் ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்து அந்தப் பிரச்சாரத்தை செய்யுங்கள்.

ஐந்து வருடம் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னேன். ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதையும் தெளிவாகச் சொல்லிவிட்டேன். இவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்ததனால்தான் இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக வந்துள்ளது. வளர்கின்ற மாநிலங்களில் முதன்மையான மாநிலம் தமிழ்நாடு. 11.19 சதவிகித வளர்ச்சியைத் தமிழ்நாடு கடந்த ஆண்டு அடைந்திருக்கிறது.

நான் இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறோம், இவ்வளவு மக்கள் நல திட்டங்களைக் கொடுத்திருக்கோமே, யோசித்துப் பாருங்கள் - ஒன்றிய பா.ஜ.க அரசு நமக்குத் துணையாக நிற்கிறதா? நாம் கேட்கிற நிதியைக் கொடுக்கிறார்களா? தமிழ்நாட்டுக்கு என்று ஏதாவது திட்டங்கள் கொடுக்கிறார்களா? கிடையாது. கடந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று எந்தத் திட்டமும் கிடையாது. 'தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற பா.ஜ.க–வைத் தமிழ்நாடு புறக்கணிக்க வேண்டும். ஏற்கனவே பல தேர்தல்களில் புறக்கணித்திருக்கிறோம். பத்து தோல்வி பழனிச்சாமியை இந்த முறை மொத்த தோல்வி பழனிச்சாமியாக்கி வீட்டில் உட்கார வைக்க வேண்டும்.

இன்று எடப்பாடி பழனிசாமி பிரச்சாரத்துக்குச் செல்லும்போது இரண்டு விரல்களைக் காட்டுகிறார். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவர் சின்னத்தைக் காட்டி வாக்கு கேட்கிறார் என்று நினைக்கிறீர்களா? கிடையாது, ``நான் ஏற்கனவே பத்து முறை தோற்றுவிட்டேன், இந்த முறை பதினோராவது முறை தோற்கப் போகிறேன்" என்பதை அடையாளமாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, என்னைப் பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார், எனக்கு எந்த அனுபவமுமே இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆமாம், அந்த அனுபவமெல்லாம் எனக்கு இல்லைதான். யார் காலிலும் விழுந்து பதவி வாங்கும் அனுபவம் எனக்குக் கிடையாது. சங்கிக் கூட்டத்துக்குப் பயப்படும் அனுபவம் எனக்குக் கிடையாது. என் அனுபவம், என்னென்றைக்கும் மக்களோடு மக்களாக நிற்பேன், சுயமரியாதைக்காக நிற்பேன். இந்தக் கலைஞர் பேரன் உதயநிதி என்றைக்கும் மக்களோடு மக்களாகத்தான் நிற்பேன்.

#### ஜாடிக்கு ஏற்ற மூடி

ஊரில் ஒரு பழமொழி சொல்லுவார்கள், 'ஜாடிக்கு ஏற்ற மூடி' என்று, அது மாதிரி இன்று மோடிக்கு ஏற்ற ஓர் அடிமையாகத் எடப்பாடி பழனிசாமி அவர்கள் இருக்கிறார். பா.ஜ.க–வை நாம் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டோம் என்று தெரிந்து, அ.தி.மு.க என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டு இன்று பா.ஜ.க தமிழ்நாட்டுக்குள் நுழையப் பார்க்கிறது. டெல்லியிலிருந்து எடப்பாடி பழனிசாமி என்கிற ரிமோட் கண்ட்ரோல் மூலமாகத் தமிழ்நாட்டை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்கள். நாம் மீண்டும் மீண்டும் அவர்களுக்குச் சொல்வோம், தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல்தான் என்பதை நாம் இந்த சட்டமன்றத் தேர்தலில் நிரூபித்துக் காட்டுவோம்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன். பாசத்தோடு கேட்கிறேன். உரிமையோடு கேட்கிறேன். உங்கள் வீட்டு பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக பூரிப்பாக சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். அண்ணன் மெய்யநாதன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி என்று தெரிவித்தார்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், விராலிமலை தொகுதி வேட்பாளர் செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை தொகுதி வேட்பாளர் மருத்துவர் முத்துராஜா, மாவட்டக் கழகச் துணைச் செயலாளர்கள் ஞான இளங்கோவன், ஸ்ரீதேவி, அயலக அணி மாநிலச் செயலாளர் அப்துல்லா, கீரை தமிழ்ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.வி.செல்வம், கே.எம்.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மணிராஜன், ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, வடிவேல், கே.எஸ்.ரவி, குமார், பழனி குமார், சிவக்குமார், பேரூராட்சி தலைவர் இராசி முருகானந்தம், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முகமது ரபீக், கவிக்குமார், தமிழ்ராசு, நசுரூதீன், கோட்டூர் அருண் சேகர், இளையராஜா, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியைச் சேர்ந்த திராவிடர் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தேசிய முற்போக்கு திராவிடர் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மய்யம், மனிதநேய ஜனநாயக கட்சி, எஸ்.டி.பி.ஐ, ஆதி தமிழர் பேரவை உள்ளிட்ட அனைத்து தோழமை கட்சியைச் சேர்ந்த பெரியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், நெசவாளர்கள், விவசாயப் பெருமக்கள், வர்த்தகப் பெருமக்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.